தலைப்பு 274 - அனுராதபுர மாவட்ட செயலகம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 274 – அனுராதபுர மாவட்ட செயலகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அனுராதபுர மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அனுராதபுர மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்களில் நிதி நிலைமை, நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க பொருண்மையானவை தொடர்ப்பிலும் நியாமான நிலைமையை பிரதிபளிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கையில் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த வியடங்களில் இருந்துதான தாக்கத்தை தவிரத்து எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்கை தயாரிக்கும் அடிப்படை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய 1 ஆம் பக்கம் தொடர்பில் கவணம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்ப பிரமாணம் 150, 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனுராதபுர மாவட்ட செயலகத்தின் பொது திறைசேரியினதும், பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால் இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை அனுராதபுர மாவட்ட செயலகத்தின், பொது திறைசேரியினதும், பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மட்டும் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்ட இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும், உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அனுராதபுர மாவட்ட செயலகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் ஆட்களைப் பதிவு செய்யும் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படை ஒன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக

காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவு ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடகத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள், சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமானதாகவும் உள்ளடக்கப்பட்டதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலை மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) ஆதனங்கள் பொறித்தொகுகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	மீளாய்வாண்டிற்கான நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரண வகைக்குரிய 02 வகையான சொத்துக்கள் முன்னைய ஆண்டின் இறுதி மீதி மற்றும் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியிடையே ரூபா 21,933,616 இற்கான இணக்கமின்மை காணப்பட்டது.	2025 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என.	நிதிக் கூற்றுக்கள், முன்னைய ஆண்டின் இறுதி மீதியுடன் நேரொப்ப தயாரிக்கப்பட வேண்டியதுடன் இணக்கமின்மையை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்யப்பட்ட வேண்டும்.
(ii)	2018 ஆண்டின் போது நிறுவப்பட்டிருந்த ரூபா 2,405,200 இற்கான பெறுமதியையுடைய 02 சூரியசக்தி மின்சக்தி முறைமைகள் மீளாய்வாண்டின் போதும், கணக்கீடு செய்திருக்காமையால் நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும்	2025 பெப்ரவரி மாதம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என.	சொத்துக்களின் சரியான பெறுமதியை கணக்கீடு செய்து ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் மீதியை சரி செய்ய வேண்டும்.

உபகரணங்களில் அந்தப் பெறுமதியினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.		

(ஆ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் போது ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்காக (9152 குறியீட்டுக்கு உரிய) ரூபா 32,536,300 தொகை சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்த சீராக்கல்களுக்காக போதியளவு சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.	ரூபா 19,061,973 இற்கான வித்தியாசம் அந்த ஆண்டின் ஆரம்ப மீதிகளை உட்படுத்தும் போது ஆண்டிற்கான கூட்டப்பட்ட பெறுமதி ஆகும் என.	மீதிகளுக்கு மேற்கொள்ளப்படுகின்ற சீராக்கல்களுக்காக போதியளவு வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ள வேண்டியதுடன் உரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்கள் இவ்வறிக்கையில் 1.6.1(அ)(i) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களின் படி முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்திருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட அறிக்கையில் 1.6.1(அ)(ii) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் செயற்படுத்தியிருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 செலவு முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீடுகள் முடிந்தளவு முழுமையாகவும் சரியாகவும் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 08 செலவுத் தலைப்புக்களின் ரூபா 618.7 மில்லியன் தொகைக்கான ஆரம்ப மதிப்பீட்டு ஏற்பாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 225.24 மில்லியன் தொகை அதாவது 30	எதிர்பார்த்த செலவுகள் ஏற்படாமை, செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் போதியளவாக காணப்படாமை மற்றும் தேசிய பாதீட்டு திணைக்களத்தினால் மேலதிக ஏற்பாடுகள் ஒதுக்குதல், ஆகிய காரணங்களினால் ஏற்பாடுகள் மாற்றப்பட்டுள்ளது என.	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் மதிப்பீட்டு ஏற்பாடுகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டியதுடன் ஒதுக்கப்பட்ட செலவு விடயங்களுக்குரிய ஏற்பாடுகள் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் உத்தேச

	சதவீதம் முதல் 82.5 சதவீதம் வரை எண்ணிக்கையினால் ஏற்பாடுகள் வேறு செலவு விடயங்களுக்காக மாற்றுதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.		தொழிற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டும்.
(ஆ)	09 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 23.75 மில்லியன் தொகையில் ரூபா 10.49 மில்லியனுக்கான ஏற்பாடுகள் பயன்படுத்தப்படாமல் அதாவது 31.5 சதவீதம் முதல் 62.6 சதவீதம் வரையான எண்ணிக்கையினால் மதிப்பீட்டு ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது.	மிகையாக பாதீட்டு ஏற்பாடுகள் ஒதுக்கப்படல், எதிர்பார்த்தவாறு செலவுகள் மேற்கொள்ள நேரிடாமை, செலவுக்கட்டுப்பாடு ஆகிய காரணங்களினால் உரிய சேமிப்புக்கள் நேரிட்டிருந்தது என.	-மேற்படி-
(இ)	தம்புத்தேகம பிரதேச செயலகத்தினால் 03 நிர்மாணவேலை செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் போது ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 4,761,500 தொகைக்கான மொத்த ஏற்பாடுகளும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	உத்தேச காணியின் நிர்மாணவேலை மேற்கொள்வதற்காக எதிர்ப்புக்கள் ஏற்பட்டமை தெரிவு செய்யப்பட்ட காணி போதியளவாக காணப்படாமை மற்றும் கால்வாய் காப்புப் பிரதேசமாக காணப்பட்டமை, ஜனாதிபதி தேர்தல் காரணமாக புதிய செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாமை ஆகிய காரணங்களினால் இந்த செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு முடியாமல் போனது என.	முறையான திட்டம் ஒன்றின்றி செயற்திட்டங்களை தெரிவு செய்த உத்தியோகத்தர் தொடர்பாக நடவடிக்கை எடுக்கவும் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை முழுமையாக பயன்படுத்தும் திட்டங்கள் தயாரித்தலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

3.2 கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ள வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 38 இன் பிரகாரம் அனுராதபுர மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுகின்றது என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோத்தரினால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அந்த முறைமையின்	உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைகளுக்குரிய அறிக்கைகளின் மூலம் அந்த தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டுள்ளது என.	2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 38 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

வெற்றிகரத் தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு மேற்கொண்டு அதன்படி முறைமையின் ஆக்கபூர்வமாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ள வேண்டியதுடன் அந்த மீளாய்வு எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

	சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	அவதானிப்பு பெறுமதி ரூபா	இணங்காமைகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை				
(i)	நிதிப் பிரமாணங்கள் 137 மற்றும் 138	376,527	கொடுப்பனவுகளை அங்கீகரித்தல் மற்றும் சான்றுபடுத்துதல் மேற்கொள்ளாமல் தம்புத்தேகம பிரதேச செயலகத்தினால் மீளாய்வாண்டு திசெம்பர் மாத்தினுள் 06 உறுதிச் சீட்டுக்களுக்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.	கட்டளையிடப்பட்ட பண்டங்களின் பகுதியொன்று மாத்திரம் கிடைத்திருந்தமையால் காசோலை வழங்கப்படாமல் மீதியான காகிதாகிகள் கிடைத்த பின்னர் உறுதிச் சீட்டுக்களின் குறைபாடுகளையும் சரிசெய்து தற்போது இந்த காசோலைகள் உரிய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு கொடுப்பனவு அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என.	நிதிப் பிரமாணங்களுக்கு முரணாக உறுதிச் சீட்டுகளுக்கு கொடுப்பனவு செய்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ii)	நிதிப் பிரமாணம் 237(ஆ)	563,400	பண்டங்கள் கிடைத்திருந்தன என மற்றும் அந்த பண்டங்கள் பண்டப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும், சான்றிதழ் ஒன்று உறுதிச் சீட்டுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும், தலாவ பிரதேச செயலகத்தினால் கொள்வனவு செய்திருந்த வாயுசீராக்கி இயந்திரமொன்றிற்காக 2024 திசெம்பர் 20 திகதி காசோலையொன்று மூலம் கொடுப்பனவு மேற்கொள்ளும் போது உரிய பண்டங்கள் கிடைத்துள்ளது என உறுதிப்படுத்தப்படாமல் கொடுப்பனவு சான்றுபடுத்தப்பட்டிருந்தது.	கணக்காய்வு அவதானிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என.	நிதிப் பிரமாணங்களுக்கு முரணாக கொடுப்பனவு மேற்கொண்ட உத்தியோகத்தர் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.4 வரித் தேவைப்பாடுகளுடன் இணக்கமின்மை

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
நொச்சியாகம, கலென்பிந்துனுவெவ, தம்புத்தேகம மற்றும் மஹ விலச்சிய பிரதேச செயலகங்களின் வரி செலுத்த வேண்டிய உத்தியோகத்தரிடம் தொழில் வருமானங்களில் இருந்து செலுத்த வேண்டிய முற்பணம் தனிப்பட்ட வருமானவரிக் கணிப்பின் போது (APIT Tax) பதில் கடமைக் கொடுப்பனவு, தனிப்பட்ட பாவனைக்காக பயன்படுத்தப்படுகின்ற அரச வாகனங்கள், பலவினக் படிகள் மற்றும் உத்தியோகபூர்வ வாசஸ்தல கொடுப்பனவு ஆகியவை வரிக் கணிப்பீட்டிற்கான வருமானம் என கணிக்கப்பட்டிருக்கவில்லை.	சில கொடுப்பனவுகள் செலவுகளை மீளளிப்புச் செய்தல் எனக் கழித்து முற்பண தனிப்பட்ட வருமான வரிக் கணிப்பின் போது நீக்கப்பட்டதுடன் ஏனைய கொடுப்பனவுகள் வரிக் கணிப்பீட்டிற்காக உட்படுத்தப்பட்டு நிலுவை வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என.	இறைவரிச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிலுவை வரித் தொகையை அறவீடு செய்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

3.5 மோசடித் தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
கெபிதிகொல்லாவ பிரதேச செயலகத்தின் இலங்கை மகளிர் பணியக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் என சேவையாற்றிய பெண் உத்தியோகத்தர் ஒருவர் 2017 ஆண்டில் மேற்கொண்டிருந்த ரூபா 90,000 இற்கான நிதி மோசடி தொடர்பாக முறையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு மற்றும் குறிப்பிட்ட பணத்தை அறவீடு செய்தவற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	அனு/2/4/1/3/7 இலக்கங் கொண்ட மற்றும் 2024.07.24 திகதிய கடிதத்தின் மூலம் அந்தத் தீர்மானம் செயலாளர், சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சிற்கு அறிவிக்கப்பப்பட்டுள்ள போதிலும் அது தொடர்பான தொடர்நடவடிக்கைகளுக்காக அறிவுரைகள் இதுவரை கிடைத்திருக்கவில்லை என.	அமைச்சுடன் தொடர்பு கொண்டு முறையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 உள்நாட்டு நிதியங்களின் மூலம் செயற்படுத்தப்பட்டுள்ள செயற்திட்டங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கிழக்கு நுவரகம் பலாத பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் விஹாரை ஒன்றில் பிக்குகள் வசிக்கும் கட்டிடமொன்று செப்பனிடும் செயற்திட்டத்திற்காக கொடுப்பனவு செய்யும் போது நிறைவேற்றப்படாத வேலை விடயம் ஒன்றிற்கு ரூபா 107,160 தொகையொன்று மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.	நிர்மாணவேலை அலுவல்களில் ஏற்பட்டுள்ள குறைபாடுகள் தொடர்பாக மாவட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதுடன் இது தொடர்பான விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு கணக்காய்விற்கு தகவல்கள் அறிவிக்கப்படும் என.	இது தொடர்பாக முறையான விசாரணையொன்று மேற்கொண்டு மிகையாக செலுத்திய பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	மத்திய நுவரகம் பலாத பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் பாதை ஒன்றிற்கு சரளைக் கற்கள் போட்டு அபிவிருத்தி செய்வதற்கான செயற்திட்டமொன்றிற்காக கொடுப்பனவு செய்யும் போது இரண்டு வேலை விடயங்களுக்காக முறையே ரூபா 353,968 தொகை மற்றும் ரூபா 115,748 தொகை என கூட்டுத்தொகை ரூபா 469,716 இற்கான தொகையொன்று	மதிப்பீடுகள் தயாரிக்கும் போது சரளைக் கற்களின் கள கனத்தின் நடுநிலைப் பெறுமதி என 1.35 எனப் பயன்படுத்தப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவு செய்யும் போது மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஆய்வுகூட அறிக்கையின் படி கள கனத்தின் நடுநிலை பெறுமதி 1.83 என கணிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த	-மேற்படி-

	மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.	காரணத்தினால் ஆகும் என அறிவிக்கப்பட்டிருந்தது.	
(இ)	மத்திய நுவரகம பலாத பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் தெப்பன்குளம தர்ம போதி விஹார மாவத்தைக்கு சரளைக் கற்கள் பரப்பி அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக கொடுப்பனவு செய்யும் போது மதிப்பீட்டில் இரண்டு வேலை விடயங்களுக்காக முறையே ரூபா 686,648 தொகை மற்றும் ரூபா 224,536 தொகை ஆக கூட்டுத்தொகை ரூபா 911,184 இற்கான தொகையொன்று மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.	மதிப்பீடுகள் தயாரிக்கும் போது சரளைக் கற்களின் கள கனத்தின் நடுநிலைப் பெறுமதி என 1.35 எனப் பயன்படுத்தப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவு செய்யும் போது மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஆய்வுகூட அறிக்கையின் படி கள கனத்தின் நடுநிலை பெறுமதி 1.83 என கணிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த காரணத்தினால் ஆகும் என அறிவிக்கப்பட்டிருந்தது.	-மேற்படி-
(ஈ)	மத்திய நுவரகம் பலாத பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் எலகந்த பாதை, நீர்ப்பாசன கால்வாய் பாதையில் 02 மதகுகள் மற்றும் சரளைக் கற்கள் பரப்பி அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக கொடுப்பனவு செய்யும் போது மதிப்பீட்டில் இரண்டு வேலை விடயங்களுக்காக முறையே ரூபா 180,773 தொகை மற்றும் ரூபா 59,113 தொகையாக கூட்டுத்தொகை ரூபா 239,886 இற்கான தொகையொன்று மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.	மதிப்பீடுகள் தயாரிக்கும் போது சரளைக் கற்களின் கள கனத்தின் நடுநிலைப் பெறுமதி என 1.35 எனப் பயன்படுத்தப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவு செய்யும் போது மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஆய்வுகூட அறிக்கையின் படி கள கனத்தின் நடுநிலை பெறுமதி 1.83 என கணிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த காரணத்தினால் ஆகும் என அறிவிக்கப்பட்டிருந்தது.	-மேற்படி-
(உ)	மத்திய நுவரகம் பலாத பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் தெப்பன்குளம 20 வீடுகள் பாதையை சரளைக் கற்கள் பரப்பி அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக கொடுப்பனவு செய்யும் போது மதிப்பீட்டில் இரண்டு வேலை விடயங்களுக்காக முறையே ரூபா 557,022 தொகை மற்றும் ரூபா 182,148 தொகையாக கூட்டுத்தொகை ரூபா 739,170 இற்கான தொகையொன்று மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.	மதிப்பீடுகள் தயாரிக்கும் போது சரளைக் கற்களின் கள கனத்தின் நடுநிலைப் பெறுமதி என 1.35 எனப் பயன்படுத்தப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவு செய்யும் போது மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஆய்வுகூட அறிக்கையின் படி கள கனத்தின் நடுநிலை பெறுமதி 1.83 என கணிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த காரணத்தினால் ஆகும் என அறிவிக்கப்பட்டிருந்தது.	-மேற்படி-

(ஊ)	ஹொரொவ்பதான அதிகார பிரதேசத்தின் நிக்கவெவ முஸ்லிம் வித்தியாலயத்தில் இரண்டு மாடிகளை கொண்ட வகுப்பறை கட்டிடமொன்றின் மீதியான வேலை மேற்கொள்வதற்காக கொடுப்பனவு செய்யும் போது 03 வேலை விடயங்களுக்காக கூட்டுத்தொகை ரூபா 111,037 இற்கான தொகையொன்று மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.	ஹொரொவ்பதான பிரதேச செயலகத்தினால் கெப்பித்திகொல்லாவ வலய கல்வி அலுவலத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட இந்த செயற்திட்டம் கெப்பித்திகொல்லாவ வலய அலுவலகத்தினால் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு மேற்பார்வை அலுவல்கள் போலவே கொடுப்பனவு விடயங்களும் பிரதேச பொறியியலாளரின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான விளக்கங்களை வேண்டி 2025.05.21 திகதி வலய கல்வி பணிப்பாளருக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டது என.	-மேற்படி-
(எ)	ஹொரொவ்பதான பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் வீரசோலை முஸ்லிம் வித்தியாலய கட்டிடமொன்றின் நிர்மாண வேலையின் மீதி வேலையை பூர்த்தி செய்வதற்காக கொடுப்பனவு செய்யும் போது மேலதிக வேலை விடயங்களுக்காக ரூபா 446,994 இற்கான தொகையொன்று மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.	ஹொரொவ்பதான பிரதேச செயலகத்தினால் கெப்பித்திகொல்லாவ வலய கல்வி அலுவலத்திற்கு அங்கீகரிப்பட்டிருந்த இந்த செயற்திட்டம் கெப்பித்திகொல்லாவ வலய அலுவலகத்தினால் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு மேற்பார்வை அலுவல்கள் போலவே கொடுப்பனவு விடயங்களும் பிரதேச பொறியியலாளரின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான விளக்கங்களை வேண்டி 2025.05.21 திகதி வலய கல்வி பணிப்பாளருக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டது என.	-மேற்படி-

4.2 பெறுகைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மெதவச்சிய பிரதேச செயலகத்தின் பெறுகைத் தீர்மான இலக்கம் 2024/25 இன் படி நிழற்பிரதி இயந்திரமொன்று கொள்வனவு செய்யும் போது நியாயமான காரணங்கள் காட்டப்படாமல் கிடைத்திருந்த குறைந்த விலையை ஏற்றுக்கொள்ள மறுத்து ரூபா 80,000 மிகையாகச் செலுத்தி கொடுப்பனவு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	தொழிநுட்ப விவரக் குறிப்புக்கள் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டிருக்காமையால் குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த விலைகூறல் ஏற்க மறுக்கப்பட்டிருந்தது என.	முறையான விசாரணை ஒன்று மேற்கொண்டு பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	2024 ஆண்டு ஜனவரி மாதம் முதல் 2024 செப்தெம்பர் 30 திகதி வரையான காலப்பகுதியினுள் கெக்கிராவ பிரதேச செயலகத்தினால் ரூபா 6,522,501 தொகைக்கான கொள்வனவு செய்தல் மேற்கொண்டிருந்த போதிலும் 2024 ஆண்டிற்காக வருட ஆரம்பத்தில் பெறுகைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.	ஏற்றுக்கொள்கின்றேன். 2025 ஆண்டிற்காக தற்போது பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.	வருட ஆரம்பத்திலேயே முறைப் பிரகாரம் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.

4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பலாகல பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் அரச நிறுவனங்களுக்கு சொந்தமாகக் காணப்பட்ட கட்டிடங்களின் உடனான 4.89 ஹெக்டயர் காணி மற்றும் அதிகாரப் பிரதேசத்தில் 7 பிரிவுகளுக்குரிய அபிவிருத்தி அலுவல்களுக்காக பயன்படுத்தக் கூடிய சாத்தியமொன்று காணப்பட்ட 289.49 ஹெக்டயர் காணி குறை பயன்பாட்டுடன் காணப்பட்டதுடன் அந்தக் காணிகள் மற்றும் கட்டிடங்களை இனங்கண்டு செயற்திறனுடன் மற்றும் ஆக்கபூர்வமான பயன்படுத்துவது	இந்தக் காணிகள் அரச அபிவிருத்தி செய்திட்டங்களுக்காக பயன்படுத்தக் கூடியதாக காணப்படுவதுடன் இது வரை இக் காணிகளுக்காக கோரிக்கைகள் கிடைத்திருக்கவில்லை. அவ்வாறு கோரிக்கைகள் கிடைத்த பின்னர் தேவைப்பாட்டை கவனம் செலுத்தி அதன்படி நடவடிக்கை எடுக்க இயலும் என.	அபிவிருத்தி அலுவல்களுக்காக பயன்படுத்தக் கூடிய பயன்படுத்துவதற்குரிய சாத்தியங்கள் காணப்படுகின்ற காணிகளை பயன்படுத்துவதற்கு தேவையான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

	தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.		
(ஆ)	08 பிரதேச செயலகங்களுக்கு சொந்தமான 185 சொத்து விடயங்கள் 03 மாதங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் முதல் விளைவற்றுக் காணப்பட்டது.	திருத்தவேலை மேற்கொண்டு ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கான திட்டமொன்று தயாரிக்கப்படவுள்ளது என.	திருத்தவேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு அல்லது முறைப்பிரகாரம் அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.4 முகாமைத்துவ பலவீனங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	11 பிரதேச செயலக அதிகாரப் பிரதேசங்களுக்குரிய 119 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் இறுதியாக காணிக் கச்சேரிகள் நடாத்தப்பட்டு மீளாய்வாண்டு இறுதியளவில் 02 வருடங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும், விதிமுறையற்ற காணிகளுக்காக அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக் கொள்வதற்கு அக்கரையுள்ள மக்களுக்காக காணிகளின் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக காணி கச்சேரிகள் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் இதன் காரணமாக இந்தக் காலப்பகுதியில் அந்தப் பிரிவுகளின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த காணிக் கச்சேரிகள் நடாத்துவதற்குரிய 5,737 ஆரம்ப விண்ணப்பப்பத்திரங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு முடியாமல் இருந்தது.	உள்ளூராட்சி தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல் காரணமாக காணிக் கச்சேரிகள் நடாத்துவதற்கு முடியாமல் இருந்தது என.	முறையான சட்ட சட்டகத்தினுள் தாமதமின்றி காணிக் கச்சேரிகள் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் விவசாய வகுப்பைச் சேர்ந்த நபர்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் தயாரிப்பதற்காக 09 பிரதேச செயலக அதிகாரப் பிரதேசங்களில் 115 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்குரிய மாகாண காணி ஆணையாளரினால் இறுதி தெரிவு செய்தல் பட்டியல் அங்கீகரிக்கப்பட்டு, பிரதேச செயலகங்களுக்கு அனுப்பப்பட்டிருந்த இ.கொ. 144(ஏ) படிவங்கள் 920	பல்வேறு காரணங்களினால் அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கு முடியாமல் போனது என.	நிலவுகின்ற சிக்கலை விரைவாக தீர்த்துக் கொள்வதற்கும் சிக்கல் காணப்படாத அனுமதிப்பத்திரங்களை விரைவாக வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், செயற்திறனுடன் அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கு

	எண்ணிக்கை மீளாய்வாண்டு இறுதித் தினத்தளவில் ஒரு வருடத்திற்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும், குறிப்பிட்ட அனுமதிப்பத்திரங்களை தயாரிக்கப்பட்டு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக குறிப்பிட்ட தரப்பினருக்கு முறைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	12 பிரதேச செயலக அதிகாரப் பிரதேசங்களில் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கொள்வனவு விலைக்கு அனுமதிப்பத்திரம் தயாரிப்பதற்காக மாகாண காணி ஆணையாளரினால் இறுதித் தெரிவுப் பட்டியல் அங்கீகரிக்கப்பட்டு அனுப்பப்பட்டிருந்த இ.கொ. 144(ஏ) படிவங்கள் 1968 எண்ணிக்கைக்காக மீளாய்வாண்டு இறுதித் திகதியவில் ஒரு வருடத்திற்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும் கொள்வனவு விலைக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் பிரதேச செயலகத்தில் தடுத்து வைக்கப்பட்டு காணப்பட்டது. அதே போல் அனுமதிப்பத்திரம் வழங்கப்படாமையால் மொத்த மதிப்பீட்டின் மீது அறவிடப்பட வேண்டிய வருமானம் ஒன்றினை அறவீடு செய்ய முடியாமல் இருந்தது.	பல்வேறு காரணங்களினால் அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கு முடியாமல் போனது என.	-மேற்படி-
(ஈ)	மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 12 பிரதேச செயலகப் பிரிவுகளில் ரூபா 311,642,207 இற்கான நிலுவை குத்தகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.	நிலுவை குத்தகையில் ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளது என.	காலரீதியாக குத்தகை அறவீடு செய்யாத உத்தியோகத்தருக்கு நடவடிக்கை எடுப்பதற்கும், அறவிடப்பட வேண்டிய நிலுவை குத்தகையை விரைவாக அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	11 பிரதேச செயலக பிரிவுகளுக்குரிய மீளாய்வாண்டு இறுதித் தினத்தளவில் முறையான அங்கீகாரம் பெற்று நிலஅளவைத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்த 297 கோப்புக்கள் மற்றும் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு	மொத்த மதிப்பீட்டின் மீது குத்தகை தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என.	-மேற்படி-

	அனுப்பப்பட்டிருந்த 97 கோப்புக்களுக்குரிய மொத்த மதிப்பீட்டின் மீது குத்தகை தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		
(ஊ)	05 பிரதேச செயலகப் பிரதேசங்களுக்குரிய மாகாண காணி ஆணையாளரினால் நீண்டகால குத்தகை அடிப்படையில் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த 255 எண்ணிக்கையான கோப்புக்கள் ஒன்றிற்காக காணி உத்தியோகத்தர்களுக்கு மொத்த துணைச் சுவடுகள் தயாரிப்பதற்காக வழங்கப்பட்டு 01 வருடத்திற்கும் 06 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலங்கடந்திருந்த போதிலும் மொத்த சுவடுகள் வரைதல் தயாரிக்கப்பட்டு சமர்ப்பித்திருக்கவில்லை. அதன் காரணமாக நீண்டகால குத்தகை அனுமதிப்பத்திரங்கள் தயாரிக்கும் செய்முறை தாமதமடைந்திருந்தது.	மொத்த சுவடுகள் வரைதல் தயாரிக்கும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என.	மொத்த சுவடுகள் வரைதல் தயாரிக்கப்பட்டு நீண்டகால குத்தகை அனுமதிப்பத்திரம் வழங்கும் செய்முறையை செயற்திறனுடன் மேற்கொள்ளாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறைப்பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கும், விரைவாக நடவடிக்கை எடுத்து நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(எ)	மாகாண காணி ஆணையாளரினால் நீண்டகால குத்தகை அடிப்படையில் அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்காக 04 பிரதேச செயலக பிரிவுகளுக்குரிய 509 எண்ணிக்கையின் விண்ணங்களுக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதித் திகதியளவில் குறிப்பிட்ட அங்கீகாரம் கிடைக்கப்பட்டு 01 வருடத்திற்கும் 17 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியொன்று கடந்திருந்த போதிலும் குத்தகையாளர்களினால் ஆரம்பமாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப்பத்திரம் ஒப்படைக்கப்படாமையால் 494 விண்ணப்பப்பத்திரங்களுக்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. குறிப்பிட்ட நபர்களினால் நீண்டகால அனுமதிப்பத்திரமின்றி காணிகளை அனுபவித்து வருகின்றனரா என கண்டறிவதற்கு பிரதேச செயலகத்தின் கவனம்	ஆரம்பமாக சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பப்பத்திரம் ஒப்படைத்திருக்காத குத்தகையாளர்களுக்கு நினைவூட்டல் கடிதம் அனுப்பப்படல் மற்றும் கிராம உத்தியோகத்தர் மூலம் அறிவுருத்தல் மேற்கொள்ளப்பட்டு தொடர்நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என.	ஆரம்பமாக சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பப்பத்திரங்கள் ஒப்படைத்திருக்காத குத்தகையாளர்களிடம் குறிப்பிட்ட ஆவணங்களை விரைவாக பெற்றுக் கொண்டு அனுமதிபத்திரங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் இது தொடர்பாக காலரீதியாக நடவடிக்கை எடுக்கப்படாத உத்தியோகத்தர் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

செலுத்தப்பட்டிருக்காததுடன் இதன் காரணமாக குத்தகையை கணிக்கும் செய்முறை தாமதமடைவதன் மூலம் அரசிற்கு உரித்தாக்கப்பட வேண்டிய குத்தகை வருமானத்தை இழந்துள்ளது.		

5. மனித வள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மாவட்ட செயலகத்தின் மற்றும் 22 பிரதேச செலயகங்களின் சிரேஷ்ட மட்ட பதவிகளில் 35 வெற்றிடங்களும் மூன்றாம் மட்ட பதவிகளில் 13 வெற்றிடங்களில் இரண்டாம் மட்ட பதவிகளில் 77 வெற்றிடங்களும் மற்றும் ஆரம்ப மட்டப் பதவிகளில் 18 வெற்றிடங்களும் காணப்பட்டது.	மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இந்த அலுவலகத்தின் மற்றும் 22 பிரதேச செயலகங்களில் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணித் தகவல்கள் சரியானவை என.	பதவியணி மீளாய்வொன்று மேற்கொண்டு அத்தியவசியான வெற்றிடங்களை மாத்திரம் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.